DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.238/2025**

Prosecution **PW.6**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சஞ்சிவிராமன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | சம்பத் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுக்கா கொம்பாடிபட்டியில் குடியிருந்து ரேசன் கடையில் சேல்ஸ்மேனாக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன சதிஷ்குமாரைத தெரியும். எனது மாமா மகன் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். 2021ம் ஆண்டு 8வது மாதம் தேதி ஞாபகமிலலை அன்று சதிஷ்குமார் பிறந்தநாள். அன்று மதியம் 03.30 மணியிலிருந்து 04.00 மணியிருக்கும் நானும் பாலாஜியும் சிந்தலவாடி பெட்ரோல் அடிப்பதற்காக லாலாப்பேட்டை மேற்கே உள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கிற்கு சென்றோம்.

2. சதிஷ்குமார் வழக்கம் போல் வேலையை முடித்துவிட்டு கரூர்–திருச்சி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி Splender என்ற பச்சை கலர் TN 47 AS 0172 என்ற இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது பெட்ரோல் பங்கிற்கு 100 மீட்டர் தூரம் இருக்கும். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஈச்சர் வண்டி பின்னால் சதிஷ்குமார் தனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது ஈச்சர் வண்டியை ஓட்டி வந்தவர் திடிரென்று பிரேக் போட்டதால் சதிஷ்குமார் ஈச்சர் வண்டியின் மீது தனது இருசக்கர வாகனத்தை மோதிவிட்டார். அதில் சதிஷ்குமார் தலையில் காயம் ஏற்பட்டு

சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் குளித்தலை GH க்கு கொண்டு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்திற்கு காரணம் இருவரரின் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம். (**சாட்சி எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். **)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. அ.சா.5 பாலாஜி எனது உறவினார் ஆவார். இறந்து போன சதிஷ்குமாரின் அப்பா செல்வராஜ் எனது தாய்மாமா ஆவார். சம்பவ சமயத்தில் எதிரி எந்த திசையில் சரியாக செல்லவேண்டுமோ அந்த திசையில் சரியாக சென்றால் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள். போலிஸ் விசாரணையில் எதிரி வேகத்தை குறைத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வேகத்தை குறைப்பது என்றால் திடிரென்று பிரேக் அடிப்பதற்கு வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். எதிரி வேகத்தைதான் குறைத்தார் என்றால் சரிதான்.

2. பொதுவாக செல்லும் வாகனம் குறுக்கே எதாவது வந்தால் வேகத்தை குறைக்கவேண்டும்ள ன்றால் சரிதான். லாரிக்கு பின்னால் வந்தவர் கொஞ்சம் கவனமாக வந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். இறந்து போன சதிஷ்குமாரின் கவனக்குறைவாலும், ஆஜாக்கிரதையாக இருந்தது தான் காரணம் என்றல் சரியல்ல. விபத்து வழக்கில் நஷ்ட ஈடு பெறுவதற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்துக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.16 18:21:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.